செய்தி வெளியீடு:107 நாள் : 19–2–2013

மைலாப்பூர் – திருவல்லிகேணி வட்டாச்சியர் அலுவலகத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தோப்பு என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள் 19.2.2013 அன்று திடீர் ஆய்வு மேற்கொண்டு வருகை பதிவேடுகளை ஆய்வு செய்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சி தலைவி அம்மா அவர்கள் அறிவித்த நலத்திட்டங்கள் பொதுமக்களுக்கு சரியாக, முறையாக சென்றடைகின்றதா என்பதனை ஆய்வுசெய்தார்.

வட்டாச்சியர் அலுவலகத்திற்கு வரும் பொது மக்களின் அடிப்படை வசதிக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சி தலைவி **அம்மா** அவர்கள் ரூபாய் பத்து லட்சம் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

வட்டாச்சியர் அலுவலகத்திற்கு வரும் மக்களின் பயன்பாட்டிற்காக கட்டப்படும் கழிப்பறை கட்டிடத்தை ஆய்வு செய்து பணியை விரைவாக முடிக்க ஆணை பிறப்பித்தார். மக்கள் அமருவதற்கான அறையையும் இருக்கைகளையும் ஆய்வு செய்தார். நிலுவையில் உள்ள முதியோர் ஒய்வுதிய விண்ணப்பங்களை ஆய்வு செய்து பயணாளிகளுக்கு விரைந்து கிடைத்திட நடவடிக்கை எடுக்குமாறு ஆணை பிறப்பித்தார். விலையில்லா வேட்டி சேலைகள் வழங்கப்பட்ட விவரத்தையும் ஆய்வு செய்தார்கள். வட்டாச்சியர் அலுவலகத்தில் குடிநீர் குழாய் வசதி செய்திட சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி உடனடி நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கினார்கள். மேலும், வட்டாசியர் அலுவலகத்திற்கு வந்த பொது மக்களின் குறைகளை கேட்டறிந்து விரைந்து குறைகளை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்தார்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**